**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு மிகை நிதியம் - 2013**

-----------------------------------------------------------------------------------------------------------------

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு மிகை நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுறவு மிகை நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிப்பீடு செய்வதிலுள்ள வழுவின் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய 23 நிலையான சொத்து விடயங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 84,101 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வங்கிக் கணக்கொன்றில் உள்ளடக்கப்பட்டிருந்த 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 237,482 கூட்டுத்தொகையான 09 நேரடி செலவுகள் மற்றும் ரூபா 805,634 கூட்டுத்தொகையான 02 வங்கிக் கடன் பெறுவனவுகள் இனங்காணப்பட்டு கணக்காய்வு தினமான 2015 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 03 சொத்துக்களின் மீதிகள் அதனுடன் தொடர்புடைய பட்டோலைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 260,606,703 கூட்டுத்தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

#### 2.2.3 தொங்கல் கணக்கு

நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 9,475,735 தொகையான தொங்கல் கணக்கின் மீதியினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பல வருடங்களாக முன்கொண்டுவரப்படும் ரூபா 375,504 தெதொகையான 02 மிகை அறவீட்டு மீதிகள், ரூபா 1,716,566 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் மற்றும் ரூபா 10,221,723

தொகையான 05 செலவின மீதிகள் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் விடயங்களின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விபரம் | பெறுமதி | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) கூட்டுறவுச் சங்கக் கடன்கள் | 560,194,930 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் பட்டோலைகள் |
| (ஆ) செயற்திட்டக் கடன்கள் | 5,000,000 | -மேற்படி- |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 395 (ஆ) | மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | 2013 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 80,867 பெறுமதியான 06 காசோலைகள் தொடர்பில் 2015 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தி | கணக்காண்டு முடிவுற்று 02 மாதங்களிற்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையுடன் திரட்டிய நிதியத்தின் மாற்றங்களைக் காண்பிக்கும் கூற்றொன்று அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1974 சனவரி 10 ஆந் திகதிய இலங்கைக் குடியரசின் 93/5 ஆம் இலக்க வர்த்தமானியின் 44 (iii) ஆம் பிரிவின் பிரகாரம் மிகை நிதியத்தின் நிதிகள் ஆரம்ப மட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கும், நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும், ஒழிப்போருக்கு எதிரான வழக்குகளில் அவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உதவி வழங்குவதற்கும், பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிற்கு உதவி வழங்குவதற்கும் மாத்திரம் ஈடுபடுத்த வேண்டிய போதிலும், அதற்கு முரணான மூன்று பணிகளிற்காக ரூபா 95,174,250 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 27,722,806 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 33,360,994 ஆனதால் நிதி விளைவுகளில் ரூபா 5,638,188 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிலையான வைப்பினை பிணையாக வைத்து பெறப்பட்ட கடனுக்கான வட்டி செலுத்துதல் ரூபா 60,851,569 இனால் அதிகரித்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கூட்டுறவு சங்க கடன் மீதியானது ரூபா 647,215,868 ஆக இருந்ததுடன் 15 சதவீதம் அல்லது ரூபா 95,785,091 கடன் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் அந்த மீதி 05 வருடங்களை கடந்திருந்தது. அவ்வாறே ரூபா 551,430,777 தொகையான சுழற்சிக் கடன் மீதியில் ரூபா 41,905,020 தொகையானது 05 வருடங்களை கடந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதியத்தின் வங்கி நடைமுறை கணக்கின் மீதி ஒவ்வொரு மாதமும் ரூபா 2 மில்லியனை விட அதிகமாக இருந்ததுடன் மாதாந்த சராசரியான செலவினம் எதிர்வு கூறப்பட்டு அந்த கணக்கின் மீதியானது வட்டி வருமானமொன்றினை பெறக்கூடிய வகையில் பயனுள்ள விதத்தில் முதலீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுறவு மிகை நிதியத்திற்குரிய நிலையான வைப்புக்களை பிணைவைத்து 02 கூட்டுறவு சங்கங்களுக்கு 2004 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் அரச வங்கியொன்றின் மூலம் ரூபா 130 மில்லியன் பெறுமதியான கடனுக்காக பிணைமுறிகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், உரிய சங்கத்தினால் கடன் மீள செலுத்தல் கைவிடப்பட்டமையின் காரணத்தால் வங்கி மூலம் ரூபா 66.4 மில்லியன் தொகை நிலையான சொத்துக்களில் ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் இத்தொகை உரிய சங்கங்களிடமிருந்து அறவிடுவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2008 ஆம் ஆண்டில் மிகை நிதியத்தில் செயற்திட்டக் கடனாக கூட்டுறவு சற்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 5,000,000 தொகையினை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் குறிக்கோளுக்கு புறம்பாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 27 உத்தியோகத்தர்களுக்கு இடர் கடன்களும் மோட்டார் சைக்கிள் கடன்களும் வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 வரையில் முறையே ரூபா 31,412 மற்றும் ரூபா 200,629 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) எரிபொருள் நிரப்பு நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்காக கூட்டுறவு சங்கமொன்றிற்கு மீளாய்வாண்டில் ரூபா 17 மில்லியன் கடன் தொகை பிணைப் பொறுப்பொன்று இல்லாமல் வழங்கப்பட்டிருந்தது. நிரப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் தீர்ப்பனவு உரித்து சங்கத்திடம் இல்லாதிருந்ததுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிவில் பொறியியலாளரொருவரால் அந்த கட்டுமானப் பெறுமதி ரூபா 8,150,379 என சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன், வழங்கப்பட்ட கடன் தொயில் ரூபா 8,849,621 பெறுமதியானது எந்த காரணத்திற்காக ஈடுபடுத்தப்பட்டது என்பது சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையின் கீழ் கூட்டுறவு சங்கமொன்றிற்கு ரூபா 17 மில்லியன் பிணைப்பொறுப்பொன்று இல்லாது வழங்கியமை கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக இருந்தது.

(இ) 2013 மே 08 ஆந் திகதி வரிசை அமைச்சின் கீழான அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு ரூபா 75 மில்லியன் கடன் தொகையினை வழங்குவதற்காக நிதியத்தின் குழுவினால் கடன்தொகை 06 மாதங்களினுள் தீர்ப்பனவு செய்வதற்கும், கடனுக்கு பிணை வைப்பதற்கும் கடன் தொடர்பில் முறையான ஒப்பந்தமொன்றிற்கு கைச்சாத்திடுவதன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அதற்கு முரணாக கடன் உடன்படிக்கையொன்றோ அல்லது பிணையொன்றே வைத்துக்கொள்ளப்படாமல் குறித்த கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) சுகாதார நிலையமொன்றினை நிர்ாமணிப்பதற்காக முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் கூட்டுறவு சங்கமொன்றிற்கு ரூபா 150 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 வரையிலும் இந்த சுகாதார நிலையத்தினை நிர்ாமணிப்பதற்குரிய காணியின் உறித்து சங்கத்தினால் கையேற்கப்படாதிருந்ததுடன் நிர்மாணப் பணிகள் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக இடம்பெற்றிருந்தன. சுகாதார நிலையத்தின் நிர்மாணத்திற்காக 05 மாடிகளுடன் கூடிய கட்டிடமொன்றே திட்டமிடப்பட்டிருந்ததெனினும், பின்னர் 02 மாடிகள் வரை குறைக்கப்பட்டிருந்ததெனினும், மதிப்பிடப்பட்ட தொகை குறைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிர்மாணத்தின் காரணமாக கூட்டுறவு சங்கம் உடைந்து விழுவதற்கு நேருமென குறிப்பிட்டு குறித்த நிர்மாணத்திற்கெதிராக தடை உத்தரவொன்றினை கோரி சங்கத்தின் அங்கத்தவரொருவரால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தமை மற்றும் சங்கத்தின் பொதுக்கூட்டம் கால வரையரையின்றி பிற்போடப்பட்டமை போன்ற பாரதுாரமான நிலைமைக்கு சங்கம் ஆளாகியிருந்தது. எவ்வாறாயினும், அநத் விடயங்களை கருத்திற்கொள்ளாமல் நிதியத்தினால் கடன்தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த செயற்திட்டத்திற்கான மதியுரையாளராக வைத்தியரொருவர் முறையற்ற விதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவரின் சம்பளம் மற்றும் படிகளாக 2012 பெப்ரவரி முதல் 2013 திசெம்பர் வரை ரூபா 1,157,000 தொகை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(உ) கொள்வனவு நடைமுறைக்கு புறம்பாக மற்றும் மாகாண கூட்டுறவு ஆணையாளரின் கண்காணிப்பின்றி நீச்சல் தடாகமொன்றினை நிர்மாணிக்கும் ஒப்பந்தமொன்றிற்காக

மீளாய்வாண்டில் மிகை நிதியத்திலிருந்து ரூபா 11,749,500 நிதி உதவியொன்றாக பாடசாலை கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ் 423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியம் 2014 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களிலிருந்த குறைபாடுகளை சுட்டிக்காட்டியதன் பின்னர் 2014 யூலை 31 ஆந் திகதி அந்த நிதிக்கூற்றுக்கள் மீள திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது. மீள் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 17 ஆந் திகதி 07 மாத கால தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

---

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மிகை நிதியத்தின் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் நிர்வாகம்

(இ) கடன்களை அறவிடுதல்

(ஈ) கூட்டுறவுச் சங்கங்களிற்கான கடன்கள்/ உதவிகளை வழங்குதல்

(உ) நிதியத்தின் பயன்பாடு